செ.வெ.எண்: 41-2020 நாள்:29.07.2020

# செய்திக்குறிப்பு

விழுப்புரம் மாவட்டத்தில் அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் உதவித்தொகை பெற தமிழ் அறிஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

## விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் தகவல்

தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம் ஆண்டுதோறும் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 2020-2021 ஆம் ஆண்டிற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பிக்க தகுதிகள்: 01.01.2020 அன்று 58 வயது நிறைவடைந்தவர்களாக இருத்தல் வேண்டும். வட்டாட்சியர் அலுவலகத்தில் வலைத்தளம் வாயிலாக (ஆன்லைன்) பெறப்பட்ட வருமானச் சான்று, தமிழ்ப்பணி ஆற்றியமைக்கான ஆதாரங்கள், தமிழ்ப்பணி ஆற்றி வருவதற்கான தகுதிநிலைச் சான்று தமிழறிஞர்கள் இரண்டு பேரிடம் பெற்று விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும். இதற்கான விண்ணப்பப்படிவம் நேரிலோ அல்லது தமிழ் வளர்ச்சித்துறையின் வலைதளத்திலோ(www.tamilvalarchithurai.com) இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படுபவருக்கு திங்கள்தோறும் உதவித்தொகையாக ரூ.2500/-, மருத்துவப் படி ரூ,500/- மற்றும் வாழ்நாள் முழுவதும் இலவச பேருந்துச் சலுகையும் வழங்கப்படும்.

நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்களை, விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இயங்கிவரும் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகத்தில் செப்டம்பர் 30ஆம் நாளுக்குள் அளிக்கப்பட வேண்டுமென விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்